Dhinathdhalam@gmail.com
www.dhinathdhalam.com

விளம்பரதாரர்கள் தேவை
தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.
☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556
நடுநிலை நாளிதழ்
DHINATH DHALAM Tamil & English daily Paper

செய்தியாளர்கள் தேவை
தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை
☎ 94440 82959

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,
நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 007 | செவ்வாய்க்கிழமை Tuesday | 07.04.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

# தமிழ்நாட்டைத் துண்டாட எத்தனை பேர் டெல்லியில் இருந்து படையெடுத்து வந்தாலும், தமிழ்நாடு தலைகுனியாது

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேச்சு



சென்னை: தமிழ்நாட்டுக்கு வரும் ஒன்றிய பாஜக அமைச்சர்களும், பாஜக முதல்வர்களும் இந்தக் கேள்விகளுக்கு பதில் சொல்வார்களா? "தமிழ் மண்ணில் நின்று, மும்மொழிக் கொள்கையை அமல்படுத்துவோம் என்று சொல்லி பரப்புரை செய்யத் தயாரா? கிறிஸ்தவத் தொண்டு நிறுவனங்கள் மீது தாக்குதல் தொடுக்கும் FCRA சட்டத்திருத்தத்தை திரும்பப் பெறுவீர்களா?, நிதி ஒதுக்கீட்டில் நீதி கிடைக்குமா? என முதல்வர் ஸ்டாலின் கேள்வி எழுப்பியுள்ளார். தமிழக தேர்தலை ஒட்டி பிரதமர், அமித் ஷா, மத்திய அமைச்சர்கள், பாஜக ஆளும் மாநில முதல்வர்கள் வரை பிரச்சாரத்துக்காக வந்துசெல்லும் நிலையில் முதல்வர் ஸ்டாலின் இந்தக் கேள்வியை முன்வைத்துள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், "தமிழ்நாட்டுக்கு வரும் ஒன்றிய பாஜக அமைச்சர்களும், பாஜக முதல்வர்களும் இந்தக் கேள்விகளுக்கு பதில் சொல்வார்களா? தமிழ் மண்ணில் நின்று, மும்மொழிக் கொள்கையை அமல்படுத்துவோம் என்று சொல்லி பரப்புரை செய்யத் தயாரா?

நிதி ஒதுக்கீட்டில் தமிழ்நாட்டுக்குத் தருவது எவ்வளவு? பாஜகவால் ஆளப்படும் செல்லக் குழந்தை மாநிலங்களுக்குத் தருவது எவ்வளவு? வெளிப்படையாக அறிவிக்கத் தயாரா?. கிறிஸ்தவத் தொண்டு நிறுவனங்கள் மீது தாக்குதல் தொடுக்கும் FCRA சட்டத்திருத்தத்தை முழுமையாகத் திரும்பப் பெறுவீர்களா அல்லது அடுத்த வாரமே நிறைவேற்றப் போகிறீர்களா? பழனிசாமி தனது டெல்லி ஓனர்களிடம் பதில் பெற்றுத் தர முடியுமா? . கண்ணியமற்ற அவதூறுகளை வாந்தி எடுப்பதை விடுத்து, மக்களின் வாழ்வுரிமைப் பிரச்சினைகளை எப்போதுதான் பேசுவீர்கள்? தமிழ்நாட்டைத் துண்டாட எத்தனைபேர் டெல்லியில் இருந்து படையெடுத்து வந்தாலும், தமிழ்நாடு தலைகுனியாது. தமிழ்நாடு போராடும். தமிழ்நாடு வெல்லும்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

நிதி நடைமுறையை கடுமையாக்க வெளிநாட்டு நிதி திருத்த மசோதாவை மத்திய அரசு மக்களவையில் கடந்த மாதம் 25-ம் தேதி அறிமுகம் செய்தது. இந்த மசோதாவை மத்திய அரசு முழுமையாக மறு பரிசீலனை செய்ய வேண்டும் என கிறிஸ்துவ அமைப்புகள் கடும் கண்டம் தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது. மசோதாவில் வெளிநாட்டு நிதி ஒழுங்குமுறை சட்ட உரிமங்கள் ரத்துசெய்யப்படும் அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்படும் சிறுபான்மை நிறுவனங்களின் சொத்துகளை கட்டுப்படுத்த அல்லது அவற்றை அகற்ற அரசு அதிகாரிகளுக்கு அதிகாரம் அளிக்கும் பிரிவுகள் கவலையளிப்பதாக உள்ளன. இது போன்ற சட்டப்பிரிவுகள் தவறான முன்மாதிரியை ஏற்படுத்தும் மற்றும் நிர்வாக ரீதியான வரம்பு மீறலுக்கு வழிவகுக்கும் என அகில இந்திய கத்தோலிக்க யூனியன் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

# தமிழ்நாட்டில் மீண்டும் அதிமுக ஆட்சி அமையும் வேட்புமனு தாக்கலுக்கு பிறகு

## பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நம்பிக்கை



சேலம்: தமிழக சட்டமன்றத் தேர்தலில் அதிமுக மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்கள் 210 தொகுதிகளில் வெற்றி பெறுவார்கள் என்று அதிமுக பொதுச் செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி கே.பழனிசாமி நம்பிக்கை தெரிவித்துள்ளார். அதிமுக பொதுச் செயலாளரும், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி கே.பழனிசாமி, சேலம் மாவட்டம், எடப்பாடி சட்டமன்ற தொகுதியில் உள்ள வட்டாட்சியர் அலுவலகத்தில், தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அவர், "2026 சட்டமன்றத் தேர்தலில் அதிமுக மற்றும் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது.

தமிழகத்தில் மொத்தமுள்ள 234 தொகுதிகளில் 210 தொகுதிகளில் எங்கள் கூட்டணி நிச்சயம் வெற்றிப் பெறும். அதிமுக பெரும்பான்மையான இடங்களில் வென்று ஆட்சி அமைக்கும்" என்று நம்பிக்கை தெரிவித்தார். தொடர்ந்து பேசிய அவர், எடப்பாடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றிஇருக்கிறோம். தமிழ்நாட்டின் முன்மாதிரி தொகுதியாக எடப்பாடியை மீண்டும் மாற்றிடும் வகையில் பணிகளை மேற்கொள்வோம் என்றார்.

மேட்டூர் உபரி நீரை 100 ஏரிகளில் நிரப்பும் திட்டத்தை திமுக அரசு அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக புறக்கணித்து வருகிறது என்று குற்றம்சாட்டிய ஈபிஎஸ், அதிமுக ஆட்சி அமைந்ததும் அந்தத் திட்டம் முழுமையாக நிறைவேற்றப்படும் என்று சூளுரைத்தார். மேலும் தமிழகம் முழுவதும் உள்ள அனைத்து தொகுதிகளிலும் அதிமுக ஆட்சி காலத்தில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களை மீண்டும் செயல்படுத்துவோம் என்றும் உறுதியளித்தார். ஆ ராசா ஆடியோ இணையதளங்களில் வெளியானது. அதைத்தான் நான் கிருஷ்ணகிரி கூட்டத்தில் பேசினேன் என்று கூறிய எடப்பாடி பழனிசாமி, அதில் கூறப்பட்டுள்ள விஷயங்கள் குறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்காமல் திமுக தலைமை என் மீது பாய்வதால் என்ன பலன்? என்றும் கேள்வி எழுப்பினார்.

திமுக ஊழல் பட்டியலை ஆளுநரிடம் வழங்கி உள்ளோம் என்று கூறிய பழனிசாமி, திமுக அமைச்சர்கள் ஊழல் குறித்து அமலாக்கத் துறையே சட்டம் - ஒழுங்கு டிஜிபி வசம் மூன்று முறை அறிக்கை அளித்துள்ளது. ஆனால் அந்த அறிக்கையின் அடிப்படையில் வழக்குப் பதிவு செய்யப்படவில்லை. அதனால் தான் நீதிமன்றம் சென்றோம். நீதிமன்றம் உத்தரவிட்ட பின்பும் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் மீது வழக்குப்பதிவு செய்வதில் காலதாமதம் ஆகிறது. அதிமுக ஆட்சி அமைந்ததும் இந்த விவகாரத்தில் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி அளித்தார். அதிமுக தமிழ்நாட்டின் பிரதான எதிர்க்கட்சி; மக்களிடம் நல்ல வரவேற்பை பெற்ற கட்சி; மீண்டும் ஆட்சிக்கு வர வேண்டும் என்று மக்கள் விரும்பும் கட்சி. அதனால் மீண்டும் அதிமுக ஆட்சி அமையும் என்று எடப்பாடி பழனிசாமி நம்பிக்கை தெரிவித்தார்.

முன்னதாக எடப்பாடி பகுதியில் அதிமுக தேர்தல் பணிமனையை அவர் திறந்து வைத்தார்.

வரி விளம்பரங்கள்



தினத்தளம்
DHINATH DHALAM

| | | |
|---|---|---|
| மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள் |
| கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் |
| ஆண்டு விழா | திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் |
| நினைவு நாள் | ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் |
| நகைக்கடன் | வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல் |

தொடர்புக்கு : ☎ +919444082959

# வேலையில்லா இளைஞர்களுக்கு ரூ.2,000, ரூ.20 லட்சம் மருத்துவக் காப்பீடு, இலவச பேருந்து பயணம்

## புதுவையில் ராகுல்காந்தி வாக்குறுதி

புதுச்சேரியில் மொத்தம் உள்ள 30 சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு ஒரே கட்டமாக வரும் ஏப்ரல் 09-ஆம் தேதி நடைபெறவுள்ளது. இதற்கான தேர்தல் பிரச்சாரம் (ஏப்ரல் 7) மாலை 5 மணியுடன் நிறைவடைகிறது. இதனால் பாஜக, என்ஆர் காங்கிரஸ், திமுக, காங்கிரஸ், இடதுசாரிகள், விடுதலைச்சிறுத்தைகள் கட்சி வேட்பாளர்கள் இறுதிக்கட்ட பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அந்த வகையில், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவரும், மக்களவை எதிர்க்கட்சித் தலைவருமான ராகுல் காந்தி டெல்லியில் இருந்து தனி விமானம் மூலம் (ஏப்ரல் 6) நண்பகலில் சென்னை வந்தடைந்தார். பின்னர் தனி விமானம் மூலம் புதுச்சேரிக்கு சென்றார். அங்கு ராகுல் காந்திக்கு



காங்கிரஸ் கட்சியினர் உற்சாக வரவேற்பு அளித்தனர். அதைத் தொடர்ந்து, லாஸ்பேட்டையில் நடந்த காங்கிரஸ் கட்சியின் தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசினார்.

ஊழல் மட்டுமல்ல, ஜனநாயகத்தைக் குழிதோண்டி புதைக்கும் வகையில் போலி மருந்து விவகாரம் உள்ளது. போலி மருந்துகள் அதிகம் தயாரிக்கப்பட்டு ஊழல் நடந்துள்ளது.

பாஜக கூட்டணி அரசு மீண்டும் தொடர்ந்தால் மின்துறை உள்ளிட்ட அனைத்தும் அதானி குழுமத்திடம் விற்று விடுவார்கள். பாஜகவின் சித்தாந்தங்களை திணிக்கும் அரசாக என்ஆர் காங்கிரஸ் அரசு உள்ளது. மக்களின் எண்ணங்களை நிறைவேற்றும் அரசாக இல்லை. ஆளுநரை வைத்து நாடகம் நடத்தும் அரசாக உள்ளது. நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகள் புதுச்சேரி மாநிலத்தில் மூடப்பட்டுள்ளன.

புதுச்சேரிக்கான காங்கிரஸ் தேர்தல் வாக்குறுதிகள்

வேலையில்லாத இளைஞர்களுக்கு மாதந்தோறும் ரூபாய் 2,000 வழங்கப்படும்.

காங்கிரஸ் ஆட்சிக்கு வந்ததும் அரசிலும், தனியார் துறையிலும் 30,000 வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும்.

காங்கிரஸ் ஆட்சிக்கு வந்தால் பேருந்துகளில் மகளிருக்கு இலவசப் பயணத் திட்டம் அமல்படுத்தப்படும்.

அரசு வேலைவாய்ப்புக்கான வயதுவரம்பு 40 ஆக உயர்த்தப்படும்.

ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூபாய் 20 லட்சம் மருத்துவக் காப்பீடு வழங்கப்படும். எந்த சிகிச்சையாக இருந்தாலும் மருத்துவ வசதி இலவசமாகக் கொடுக்கப்படும். காங்கிரஸ் ஆட்சி அமைந்ததும் புதுச்சேரியில் ஆறு மாதங்களுக்குள் உள்ளாட்சித் தேர்தல் நடத்தப்படும்.

செய்திகள்
உடனுக்குடன் படிக்க
தினத்தளம்
DHINATH DHALAM
வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்
Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

தினத்தளம் தினசரி காலை நாளிதழ் 07.04.2026

# கடையநல்லூர் தொகுதியில் அதிமுக வேட்பாளர் கிருஷ்ணா முரளி என்ற குட்டியப்பா மீண்டும் வேட்புமனு தாக்கல் செய்தார்

தென்காசி மாவட்டம் கடையநல்லூர் சட்டமன்ற தொகுதியில் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சியின் சார்பில் அஇ அதிமுகவை சார்ந்ததற்போதைய சட்டமன்ற உறுப்பினரும் தென்காசிவடக்குமாவட்ட கழகச் செயலாளருமான காசி சட்டமன்ற தொகுதியில் தென்காசி தெற்கு மாவட்ட கழக செயலாளர் செல்வ மோகன்தாஸ் பாண்டியன் கடந்த முறை 1000க்கும் குறைவான வாக்குகளில் காங்கிரஸ் வேட்பாளர் பழனி நாடாரிடம் வெற்றி வாய்ப்பு லாளர் பொய்கை சோ மாரியப்பன் விபி மூர்த்திஅதிமுக வழக்கறிஞர்கள் குழு மாடசாமி பா ண் டி ய ன் சு ப் பி ர ம ணி ய ன் க ழ க அமைப்புச் செயலாளர்பி ஜி ராஜேந்திரன் தமிழ் மாநில காங்கிரஸ் மத்திய



கிருஷ்ண முரளி என்ற குட்டிய ப்பாமீண்டும் சட்டமன்ற உறுப்பினராக போட்டியிட மனு தாக்கல் செய்தார் இது பற்றிய விபரம் ஆவது தென்காசி மாவட்டத்தில் தென்காசி ஆலங்குளம் கடையநல்லூர்ஆகியமூன்றுபொதுத் தொகுதிகளும் சங்கரன்கோவில் மற்றும் வாசுதேவநல்லூர் ஆகிய இரண்டு தனி தொகுதிகளும் உள்ளன தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் வாசுதேவநல்லூர் (தனி ) தொகுதியில்மட்டும் பாரதிய ஜனதா கட்சியைச் சார்ந்த தென்காசி மாவட்ட தலைவர் ஆனந்தன் போட்டியிடுகிறார் சங்கரன்கோவில் (தனி )சட்டமன்றதொகுதியில் டாக்டர் திலீபன் ஜெய்சங்கர் இவர் சென்னை திரிசூலம் பஞ்சாயத்து தலைவராகவும் பதவி வகித்தும் வந்துள்ளார்இவரது தாயாரும் திரிசூலம் பஞ்சாயத்து தலைவியாக இருந்து உள்ளார் இவர் கடந்த ஓர் ஆண்டுகளுக்கு முன்பு சங்கரன்கோவில் தெற்கு மாசி வீதியில் கிளினிக் வைத்து நடத்தி வருகிறார் குறிப்பிடத்தக்கது தென்இழந்தார் அதனைத் தொடர்ந்து இத் தொகுதியில்முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அண்ணாமலை மற்றும் சிலர் தொகுதியை எதிர்பார்த்து காத்திருந்த நிலையில் செல்வ மோகன்தாஸ் பாண்டியன் மறுபடியும் போட்டியிடுவதால் சொந்த கட்சியினரே சுறுசுறுப்புஇல்லாமல்இருந்து வருகின்றனர்.

இதே போன்று ஆலங்குளம் சட்டமன்ற தொகுதியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கே ஆர்பிபிரபாகரன்போட்டியிடுகிறார் ஆலங்குளம் தொகுதியை முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும் கழக அமைப்புச் செயலாளருமான பிஜி ராஜேந்திரன்எதிர்பார்த்த நிலையில் ஏமாந்து போய் தற்போது மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு வேட்பாளருடன் வேட்பு மனு தாக்கல் செய்ய சென்று வருகிறார்கிருஷ்ணமுரளி என்ற குட்டியப்பாதேர்தல் நடத்தும் அலுவலர் பி. ராஜேந்திரன் இடம் தனது வேட்பு மனுவை தாக்கல் செய்தார் அப்போது மாவட்ட துணைச் செயமாவட்ட செயலாளர் காசி தர்மம் எஸ் ஆர் அய்யாதுரை தென்காசி மாவட்ட பாஜக தலைவர் மற்றும் வாசுதேவநல்லூர் சட்டமன்ற பாஜக வேட்பாளர் ஆனந்தன் அம்மா மக்கள் முன்னேற்ற கழக மாவட்ட செயலாளர் கற்பகம் குருநாதன்ஆகியோர் உடன் சென்றனர் தென்காசி கொல்லம் மதுரைமெயின் ரோட்டில் அட்டக் குளம் அருகேதேர்தல் காரியாலயத்தைநகரக் கழகச் செயலாளர் எம் கே முருகன் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது நிகழ்ச்சியில் கழக முன்னோடிகள் கிட்டு ராஜா புகழேந்தி முத்துகிருஷ்ணன் அம்மா பேரவை செயலாளர் எஸ் எம் மைதீன் தளவாய் சுந்தரம் கருப்பையா தாஸ் ஜெயமாலன் ராஜேந்திர பிரசாத்சொக்கம்பட்டி மாரியப்பன்வசந்தம்.முத்துப்பாண்டிஜெயக்குமார் பெரியதுரை உட்பட மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் என 500க்கும் மேற்பட்டோர் ஆரவாரமாக வந்து வேட்பு மனுவை தாக்கல் செய்தனர்



தேனி மாவட்டம் நடைபெற உள்ள சட்டப்பேரவைத் தேர்தலில் முன்னிட்டு போடி சட்டப்பேரவை திமுக வேட்பாளர் பன்னீர்செல்வம் தனது வேட்பு மனுவை சட்டமன்ற தேர்தல் நடத்தும் அலுவலரிடம் சமர்ப்பித்தார். உடன் தேனி பாராளுமன்ற உறுப்பினர், தங்கதமிழ்செல்வன் மற்றும் தேனி வடக்கு மாவட்ட கழகத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்ட, ஒன்றியம், நகரம், பேரூர், கிளை கழக, பொதுக்குழு, செயற்குழு, சார்பு அணி நிர்வாகிகள், கழக தொண்டர்கள், இந்நாள் மற்றும் முன்னாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் திரளாக கலந்து கொண்டனர்.



சேலம் மாவட்டம் ஓமலூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் தேமுதிக சார்பில் ஓமலூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர் A. R.இளங்கோவன் தேர்தல் அதிகாரியிடம் வேட்புமனு தாக்கல் செய்தார். உடன் திமுக தேர்தல் பொறுப்பாளர் சுவனம் மற்றும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாவட்டச் செயலாளர் சாமுராய்குரு , நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



திருப்பூர் மாவட்டம் தாராபுரம் அரசு மருத்துவமனையில் சரியான நேரத்திற்கு மருத்துவர்கள் வராததால் நோயாளிகள் மற்றும் முதியவர்கள் சிகிச்சைக்காகவும் மாத மாத்திரைக்காக காத்திருக்க வேண்டிய அவல நிலை .



சிவகங்கை மாவட்டம் காரைக்குடி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியில் ஆலங்குடி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் அவர்களும், முக்குலத்தோர் புலிப்படை சார்பில் சிவகங்கை சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் சேது.கருணாஸ் அவர்களும், உசிலம்பட்டி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் சரவணன் அவர்களுக்கும், காரைக்குடி சட்டமன்ற தொகுதியில் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் எஸ்.மாங்குடி அவர்கள் வாழ்த்துக்களை தெரிவித்தார்

### மானாமதுரை சட்டமன்றத்தொகுதி வேட்பாளர்

# தமிழரசி ரவிக்குமாரின் 50வது பிறந்தநாளை முன்னிட்டு கோவிலில் சிறப்பு பூஜை

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை சட்டமன்றத் தொகுதி வெற்றி வேட்பாளர் ஆ. தமிழரசி ரவிக்குமார் அவர்களின் 50வது பிறந்தநாள் விழாவை கொண்டாடும் விதமாக மற்றும் நடைபெற உள்ள 2026 சட்டமன்ற தேர்தலில் மானாமதுரை சட்டமன்ற தொகுதியில் வரலாறு காணாத மாபெரும் வெற்றி பெற வேண்டி திருப்புவனம் ஒன்றியம் பசியாபுரம் அருள்மிகு ஸ்ரீ கள்ளி முத்து மாரியம்மன் கோவிலில் திமுக திருப்புவனம் மேற்கு ஒன்றிய இளைஞரணி செயலாளர் பசியாபுரம் எஸ். பிரசாந்த் அவர்களின் தலைமையிலும்,ஜி.பி.கங்காதரன், எம். சந்துரு, எம். நவீன் பாரதி, வி. வீரகுமார், அ.



ஐயப்பன் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னிலையில் சிறப்பு பூஜை நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி தமிழரசி ரவிக்குமார் அவர்களின் பிறந்தநாள் வெகு சிறப்பாக கொண்டாடினர்.

### தேசிய அளவிலான கேலோ இந்தியா போட்டியில்

# கிக் பாக்சிங் பிரிவில் தங்கம் மற்றும் வெள்ளி பதக்கங்களை வென்ற தேனி மாவட்டத்தைச் சேர்ந்த 3 மாணவிகளுக்கு பாராட்டு நிகழ்ச்சி நடைபெற்றது

சென்னையில் கடந்த சிலநாட்களுக்குமுன்பு தேசிய அளவில் நடைபெற்ற பெண்களுக்ளர் மற்றும் மாணவிகள் தங்களது வாழ்த்துக்களை தெரிவித்தனர் களை வென்றிருப்பது எங்களுக்கு பெருமை சேர்க்கிறது மேலும் மாணவிகளின் பெற்-



கான கேலோ இந்தியா போட்டியில் கலந்துகொண்ட தேனி மாவட்டத்தைச்சேர்ந்த கிருபா ஸ்ரீ, வசுமதி, சம்ஷிதாஆகியமாணவிகள் அமைச்சூர் கிக் பாக்சிங்கில் தங்கம் மற்றும் இரண்டு வெள்ளி பதக்கங்களை வென்றனர்

இந்த நிலையில் தேசிய அளவிலான போட்டியில் தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்களை வென்ற மாணவிகளுக்குதேனி மாவட்ட அமைச்சூர் கிக் பாக்சிங் அசோசியேஷன் சார்பில் பாராட்டு தெரிவிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது

இதில் தங்கம் மற்றும்வெள்ளி பதக்கங்களை வென்ற மாணவிகள் கலந்து கொண்டு அவர்களுக்கு கிக் பாக்ஸிங் அசோசியேஷன் தலைவர், பயிற்சியா-

பின்னர் இது குறித்து தேனி மாவட்ட அமைச்சூர் கிக் பாக்சிங் அசோசியேஷன் தலைவர் மகாராஜன் கூறும்போது

தேனி மாவட்ட அமைச்சூர் கிக் பாக்சிங் அசோசியேசன் சார்பில் கடந்த மூன்று வருடங்களாக மாணவிகளுக்கு பயிற்சி அளித்து பெங்களூரில் நடைபெற்ற கேலோ இந்தியா போட்டியில் பதக்கங்களை வென்ற மாணவிகள் தொடர்ந்து சென்னையில் தேசிய அளவில் நடைபெற்ற கேலோ இந்தியா போட்டியிலும்பங்கேற்று தங்கப்பதக்கம் மற்றும் 12 ஆயிரம் ரூபாய் பரிசு பெற்றுள்ளன

தேனி மாவட்டத்தில் கிராம பகுதிகளில் இருந்து வருகை தந்த சிறுமிகள் தேசிய அளவில் பதக்கங்-

றோர்கள் எங்களை நம்பி தங்களது பிள்ளைகளை பல்வேறு மாநிலங்களுக்கு அனுப்பி வைத்து தங்கம் மற்றும் வெள்ளி பதக்கங்கள் வெல்வதற்கு முக்கிய காரணமாக அமைந்தனர் என தெரிவித்தார்.



இந்தியாவில் மிகவும் பழமையான மாவட்டங்களில் ஒன்றான சேலம் மாவட்டத்தின் 175வது மாவட்ட ஆட்சியராக டாக்டர் அ. அருண் தம்புராஜ் (ஏப்05) சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் பொறுப்பேற்றுக் கொண்டார்.

# பெரியகுளத்தின் வளர்ச்சிக்கு 5 முக்கிய வாக்குறுதிகள்: விசிக வேட்பாளர் சக்திவேல் அதிரடி அறிவிப்பு!



தேனி மாவட்டம், 199-வது பெரியகுளம் (தனி) சட்டமன்றத் தொகுதியின் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் விடுதலைச் சிறுத்தைகள் கட்சி வேட்பாளர் சக்திவேல், இன்று தனியார் விடுதியில் பத்திரிகையாளர்களைச் சந்தித்தார். அப்போது தொகுதியின் நீண்டகாலப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் தனது தேர்தல் வாக்குறுதிகளை விரிவாக எடுத்துரைத்தார்.

பத்திரிகையாளர் சந்திப்பின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு 1. மாம்பழக் கூழ் மற்றும் பதப்படுத்தும் தொழிற்சாலை:

பெரியகுளம் பகுதியின் பிரதான தொழிலான விவசாயத்தை மேம்படுத்தும் விதமாக, விவசாயிகள் பயன்பெறும் வகையில் அதிநவீன மாங்காய் பதப்படுத்தும் தொழிற்சாலை அமைக்கப்படும். இதன் மூலம் விவசாயிகளுக்கு முறையான விலை கிடைப்பதோடு, உள்ளூர் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பும் உறுதி செய்யப்படும்.2. அரசு மருத்துவமனை தரம் உயர்த்துதல்:

பெரியகுளம் அரசு மருத்துவமனை போதிய வசதிகளின்றி இருப்பதைச் சுட்டிக்காட்டிய அவர், சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால் மருத்துவமனையை விரிவுபடுத்தி, கூடுதல் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார்.3. போக்குவரத்து வசதிகள் மேம்பாடு:

பெரியகுளத்திலிருந்து கானா விலக்கிற்குச் பொதுமக்கள் எளிதில் சென்று வர,நேரடி அரசுப் பேருந்துவசதிகள்புதிதாகஏற்படுத்தித்தரப்படும். இதன் மூலம் கல்வி மற்றும் வேலைக்காகச் செல்வோர் பெரும் பயனடைவர்.4. விவசாயிகளுக்கான பாதுகாப்பான நெல் கொள்முதல் நிலையம்:

சுற்றுவட்டாரப் பகுதி விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று,மழைக்காலங்களில் நெல் மூட்டைகள் நனையாதவாறு நிரந்தர மேற்கூரையுடன் கூடிய நெல் கொள்முதல் நிலையக் கட்டிடங்கள் கட்டித் தரப்படும்.5. சோத்துப்பாறை அணை சீரமைப்பு மற்றும் சுற்றுலா மேம்பாடு: குடிநீர் தட்டுப்பாட்டைப் போக்க சோத்துப்பாறை அணை முறையாகத் தூர்வாரப்பட்டு, சீரான குடிநீர் விநியோகம் உறுதி செய்யப்படும். மேலும், சோத்துப்பாறை அணைப்பகுதியை ஒருசிறந்தசுற்றுலாத்தலமாக மாற்றி, அடிப்படை வசதிகள் செய்து தரப்படும்.

வேட்பாளரின் உறுதிமொழி:

"பெரியகுளம் தொகுதி மக்களின் அடிப்படைத் தேவைகளை நன்கு அறிந்துள்ளேன். மக்களின் கோரிக்கைகள் அனைத்தும் முன்னுரிமை அடிப்படையில் நிறைவேற்றப்படும்.தொகுதியை ஒரு முன்மாதிரித் தொகுதியாக மாற்றுவதே எனது இலக்கு" என வேட்பாளர் சக்திவேல் ஆவேசமாகத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கூட்டணியைச் சேர்ந்த முக்கிய நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.



சட்டமன்றத் தேர்தலில் உளுந்தூர்பேட்டை தொகுதியில் போட்டியிடும் அதிமுக வேட்பாளர் இரா குமரகுரு தனது வேட்பு மனுவை உளுந்தூர்பேட்டை தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் செந்தில்குமாரிடம் தாக்கல் செய்தார் இதில் கூட்டணிக் கட்சி மற்றும் நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்

# இல்லத்தரசிகளுக்கு சூப்பர் டூப்பர் ஆப்பர் சங்கரன்கோவிலில் நடந்த பொதுக்கூட்டத்தில் முதலமைச்சர் ஸ்டாலின் பேச்சு



திராவிட மாடல் ஆட்சி 2.0 க்கு ஸ்டாலின் ஆகிய நான் ரெடி நீங்க ரெடியா! அது மட்டுமில்லாமல் இல்லத்தரசிகளுக்கு 8000 கூப்பன் என்கிற சூப்பர் ஆஃபருக்கு இல்லத்தரசிகள் ஆகிய நீங்கள் தயாராக இருக்க வேண்டும். ஏழாவது முறையும் நாம் ஆட்சிக்கட்டிலில் அமரும் போது இந்த ஆஃபர் உங்களுக்கு தான். என சங்கரன்கோவிலில் நடந்த பொதுக்கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின் உரையாற்றினார்.

பின்னர் அவர் கூறியதாவது:

தேர்தல் வாக்குறுதிகளையும், செய்த திட்டங்களையும் வைத்து மக்களாகிய உங்களிடம் நான் வாக்கு சேகரிக்க வந்துள்ளேன். நமது தென்காசி மாவட்டத்தில் ஐந்து சட்டமன்ற தொகுதிகள் உள்ளன. மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடுகின்ற வாசுதேவநல்லூர் சட்டமன்ற தொகுதி வெல்லும் வேட்பாளர் ராஜா ஈஸ்வரன், தென்காசியில் சட்டமன்ற தொகுதியில் போட்டியின்றவேட்பாளர் கலைகதிரவன், ஆலங்குளம் சட்டமன்ற தொகுதியில் போட்டியிடுகின்ற வேட்பாளர் பி.எச்.மனோஜ் பாண்டியன், கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடுகின்ற மதிமுக வேட்பாளர். தி.மு.ராஜேந்திரன் ஆகியோருக்கு உதயசூரியன் சின்னத்திலும் சங்கரன்கோவில் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடுகின்ற காங்கிரஸ் பேரியக்கத்தின் வேட்பாளர் சங்கை கணேசன் அவர்களுக்கு கை சின்னத்திலும், உங்களது வாக்குகளை செலுத்த வேண்டும்.

மேலும் அவர் பேசுகையில் இந்த மதச்சார்பற்ற போக்கு கூட்டணி என்பது கொள்கை கூட்டணி, வெல்லும் கூட்டணி, ஆனால் பழனிச்சாமி வசம் இருப்பதோ ஊழல் கூட்டணி. இந்த கூட்டணி ஊழலில் திளைத்து எங்கும் நகர முடியாமல் அமித்சாவின் கையில் இவர்களது குடுமி இருப்பது போல் உள்ளது. டெல்லியில் இருந்து கொண்டு ரிமோட் பட்டனை இயக்கினால் பழனிச்சாமி இங்கு ஆடுவார். இதுதான் இவர்களது கூட்டணி . தேசிய ஜனநாயக கூட்டணியில் இடம்பெற்றிருப்பவர்கள் அதிமுக எங்கள் முகவரி கிடையாது என்றும் "என்டிஏ" தான் எங்கள் முகவரி என்றும் கூறிக் கொள்கின்றனர். இதை எதிர்த்து பழனிச்சாமியால், ஒரு வார்த்தை கூட பேச முடியவில்லை என்றும் அவர் கூறினார்.

மோடி ஜி வேர் இஸ் எல்பிஜி:

நமது ஆட்சியில்தமிழ்நாட்டில் நிதி நிலைமையை சீராக்கி பல்வேறு வளர்ச்சி திட்டங்களை நாம் செய்துள்ளோம், தேர்தல் வாக்குறுதியில் சொல்லப்பட்ட வாக்குறுதியை மட்டும் நிறைவேற்றாமல் சொல்லாத பல்வேறு திட்டங்களையும் செயல்படுத்திய அரசு நமது அரசு.

டபுள் இன்ஜின் டப்பா இன்ஜின் அரசுதான் மோடி பழனிசாமி தலைமையிலான அரசு.

மக்களை வாட்டி வதைக்கின்ற கூட்டம் தான் பிஜேபி,அதிமுக கூட்டணி மக்கள் கடந்த 10 ஆண்டுகளில் மத்திய அரசால் பெரும் துயரத்துக்கு உள்ளாகி வருகின்றனர். ஒரு பக்கம் பண மதிப்பிழப்பு செய்து பொதுமக்களை வங்கிகளில் கால் கடுக்க நிற்க வைத்து வேதனையை கொடுத்தது தற்போது கேஸ் சிலிண்டர் தட்டுப்பாடு, இந்த தட்டுப்பட்டால் சிறிய அளவிலான கடைகள் நடத்த முடியாமல் முடங்கி உள்ளன. இதனால் அந்த குடும்பத்தின் பொருளாதாரம் பெரிய அளவில் பாதிக்கப்படுகின்றன. இதை எதிர்த்து பழனிசாமியால் கேட்க முடிகிறதா?

மேலும் தற்போது சிபிஎஸ்இ பாடத்திட்டத்தில் மும்மொழிக் கொள்கை கட்டாயம் என மத்திய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் அறிவித்திருந்தார். இந்தி எதிர்ப்பை பற்றி நாம் பேசினால் தமிழர்கள் நாகரீகம் அற்றவர்கள் எனக் கூறுகிறார் இந்த அமைச்சர் தர்மேந்திர பிரதான். இந்தி எதிர்ப்புக்கும் கல்வி வளர்ச்சிக்கும் எந்தசம்பந்தமும் இல்லை என்பது கூட புரியாத மத்திய அமைச்சர்கள் தான் இங்கு உள்ளனர். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டும் தான் ஆயிரம் அறிவியல் ஆய்வகங்கள் இருக்கின்றன. தமிழ்நாட்டில் என்டிஏ கூட்டணி போட்டி போட்டால் அது நோட்டா கூட தான் இருக்கும். நாம் போராடுவது, நம் கூட்டணி போராடுவது தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காக என்பதை டப்பா இஞ்சின் பழனிச்சாமிக்கு புரிய வைக்க வேண்டும். அதேபோல் தமிழ்நாட்டில் 2.0 என்ஜின்னா என்னென்ன பழனிச்சாமிக்கு காட்டணும், இந்த முறையும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி அனைத்து தொகுதிகளிலும் வெல்லும், ஆட்சியும் அமையும் என கூறினார்.



## செய்யூர் தாலுகா மருத்துவமனை மல்டி ஸ்பெஷல் மருத்துவமனையாக மாற்றப்படும்

### வேட்பாளர் அறிமுக கூட்டத்தில் சிந்தனைச் செல்வன் வாக்குறுதி

செங்கல்பட்டு மாவட்டம் தமிழக சட்டமன்றத் தேர்தலுக்கான தேதி அறிவிக்கப்பட்டு மார்ச் 31 முதல் வேட்புமனு தாக்கல் நடைபெற்று வருகின்றது.

செங்கல்பட்டு மாவட்டம் செய்யூர் தனி சட்டமன்ற தொகுதி திமுக கூட்டணி கட்சியில் இடம் பெற்றுள்ள விடுதலை சிறுத்தைகள் கட்சிக்கு இத்தொகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த தொகுதியில் போட்டியிடுவதற்கான வேட்பு மனு தாக்கல் நேற்று கூட்டணி கட்சிகளுடன் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் வேட்பாளர் சிந்தனைச் செல்வன் வேட்பு மனு தாக்கல் செய்தார்.

அதனைத் தொடர்ந்து இன்று மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் வேட்பாளர் அறிமுககூட்டம்செய்யூரில் நடைபெற்றது.

இந்த கூட்டத்திற்கு திமுக கூட்டணியில் இடம் பெற்றுள்ள மதசார்பற்ற கூட்டணி கட்சிகளின் பொறுப்பாளர்கள் மற்றும் தொண்டர்கள் ஏராளமான கலந்து கொண்டனர். அறிமுக கூட்டத்தில் பேசிய விடுதலை சிறுத்தைகள் கட்சியின் வேட்பாளர் சிந்தனைச் செல்வன் செய்யூர் பகுதிகளில் உள்ள அடிப்படை பிரச்சனைகள் அனைத்தும் சரி செய்யப்படும் என்றும் குறிப்பாக தாலுகா மருத்துவமனை மல்டி ஸ்பெஷல் மருத்துவமனையாக மாற்றப்படும் என்று உறுதளித்துள்ளார்.

## மதுராந்தகம் சட்டமன்ற தனித்தொகுதி த.வெ.க வேட்பாளர் எழில் கேத்தரின் வேட்பு மனு தாக்கல்



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தனி தொகுதி தமிழக வெற்றி கழகம் வேட்பாளர் எழில் கேத்தரின். மதுராந்தகம் தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள புரட்சியாளர் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து சுமார் 500க்கும் மேற்பட்ட தொண்டர்களுடன் தங்களது சின்னமான விசில் ஊதியவாறு ஊர்வலமாக சென்று மதுராந்தகம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் நரேந்திர ராஜ்அவர்களிடம்வேட்பு மனு தாக்கல் செய்தார் அருகில்மாவட்டநிர்வாகிகள் எம்.எஸ்.பாலாஜி சபரி பெருமாள் வழக்கறிஞர் ராஜேஷ் வெற்றிசெல்வன் மகளிர் அணி நிர்வாகி சுமதி சாமிக்கன்னு, உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு, தூத்துக்குடி தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் திமுக வேட்பாளராக போட்டியிடும் அமைச்சர் கீதா ஜீவன் வேட்புமனுவைத்தாக்கல் செய்தார்



தூத்துக்குடி சத்திரம் பேருந்து நிறுத்தம் அருகிலிருந்து திமுக வேட்பாளர் கீதாஜீவன் தனது ஆதரவாளர்களுடன் ஊர்வலமாகப் புறப்பட்டார். இந்த ஊர்வலத்தில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டனர்.

ஊர்வலமானது அழகர் ஜுவல்லர்ஸ், பெரிய பள்ளிவாசல், தந்தி ஆபீஸ், பழைய மாநகராட்சி அலுவலகம், சின்னக்கோவில் மெயின் வாயில் மற்றும் சென்ட்ரல் போலீஸ் ஸ்டேஷன் வழியாகச் சென்றது.

மக்கள் கூட்டத்திற்கு இடையே திமுக வேட்பாளர்கீதாஜீவன்நடந்தே சென்று, பழைய துறைமுகம் அருகில் உள்ள கோட்டாட்சியர் அலுவலகத்தை அடைந்தார். அங்கு தூத்துக்குடி தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் பிரபு அவர்களிடம் தனது வேட்புமனுவை முறையாகத் தாக்கல் செய்தார்.

நிகழ்ச்சியில் திமுக மாநகரச் செயலாளர் ஆனந்தசேகரன்,மாவட்டத் துணைச் செயலாளர்கள் ராஜ்மோகன் செல்வின், ஆறுமுகம், தொழிற்சங்கத் தலைவர் சுசி ரவீந்திரன், மாவட்ட அவைத்தலைவர் செல்வராஜ், மாவட்ட மருத்துவ அணித் தலைவர் டாக்டர் அருண்குமார், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் வழக்கறிஞர் எஸ்.எஸ்.பி.அசோக், மாநகர அமைப்பாளர் வழக்கறிஞர் கிறிஸ்டோபர் விஜயராஜ், மாநகர வழக்கறிஞர் அணி அமைப்பாளர் வழக்கறிஞர் ரூபஸ் அமிர்தராஜ், மாவட்ட மீனவர் அணி அமைப்பாளர் அந்தோணி ஸ்டாலின், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் கவிதா, மாநகர் மாவட்ட காங்கிரஸ்தலைவர் எஸ். எம். சகாயராஜ், முன்னாள் மாவட்டத் தலைவர் சி.எஸ். முரளிதரன், தூத்துக்குடி மாவட்ட சமத்துவ மக்கள் கழகச் செயலாளர் பி.எம். அற்புதராஜ்,மாவட்ட அவைத் தலைவர் கண்டிவேல், தேமுதிக மாவட்டச் செயலாளர் தயாளலிங்கம் உள்ளிட்ட கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த ஏராளமான முக்கிய நிர்வாகிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கோவை ஒப்பணக்காரவீதி பகுதியில் உள்ள தி சென்னை சில்க்ஸ் நிறுவனத்தில், 100 சதவிகித வாக்களிப்பது குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது



வருகின்ற ஏப்ரல் 23ம் தேதி தமிழகத்தில் சட்ட மன்ற தேர்தல் நடைபெற உள்ளது. அவ்வாறு நடைபெற உள்ள,தமிழக சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு,பொதுமக்களுக்கு 100 சதவிகிதம், வாக்குப்பதிவு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில்,

கோவை ஒப்பணக்கார வீதியில் உள்ள, தி சென்னை சில்க்ஸ் நிறுவனத்தில்,100 சதவிகிதம் வாக்கு பதிவு செய்வது குறித்து துணிப்பையை வழங்கினர்.

மேலும் நடைபெற உள்ள சட்ட மன்ற தேர்தல் குறித்தும், விழிப்புணர்வு ஏற்படுத்த பட்டது. இதனை தி சென்னை சில்க்ஸ் நிறுவனத்தின் ஒருங்கிணைப்பாளர்கள், வாடிக்கையாளர்களுக்கு வழங்கி, தேர்தல் விழிப்புணர்வை துவங்கி வைத்தனர். தினமும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் வந்து செல்லும் இக்கிளையில், சட்ட மன்ற தேர்தல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும்இந்தசெயல் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது என்பது குறிப்பிடத்தக்கது.

## கோவை கவுண்டம்பாளையம் சட்டமன்ற தொகுதியில் தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாக போட்டியிட தேர்தல் அதிகாரியிடம் விருப்ப மனு வழங்கிய சமூக ஆர்வலர் புஸ்பாணந்தம்



கோவை தடாகம் சாலை சிவாஜி காலனி பகுதியில்,வசித்து வருபவர்,வழக்கறிஞர்புஸ்பாணந்தம். இவர் கடந்த 20 ஆண்டுகளாக ஏழை எளிய மக்களுக்கு, இலவச வீட்டு மனை பட்டாகள், முதியோர் உதவி தொகை, பொதுமக்களுக்கு இலவச சட்ட ஆலோசனைகளை வழங்கி வருகிறார். மேலும் சமூக ஆர்வலரான இவர், தமிழக முற்போக்கு மக்கள் கட்சியின் மாநில துணை தலைவராகவும் இருந்து வருகின்றார். இந்த நிலையில் ஏழை எளிய மக்களுக்கு சேவையாற்றும் நோக்கில், வருகின்ற 2026 சட்ட மன்றதேர்தலில்கோவை கவுண்டம்பாளையம் தொகுதியில் போட்டியிட உள்ளார்.

இதற்கான விருப்பமனுவை கவுண்டம்பாளையம் பகுதியில் உள்ள, கோட்டாட்சியர் அலுவலகத்தில், கோட்டாட்சியரும்,அதிகாரியுமானவினோத்குமாரிடம் அதற்கான மனுக்களை வழங்கினார். மேலும் நடைபெற்று முடிந்த 2020 சட்ட மன்ற தேர்தலிலும் தான்தமிழகமுற்போக்கு மக்கள் கட்சியின் சார்பாக போட்டியிட்டதாகவும்,அப்போது எங்களது கட்சிக்குசிலிண்டர்சின்னத்தைதேர்தல்ஆணையம் வழங்கியது. அதேபோல இந்த ஆண்டும் சிலிண்டர் சின்னத்தை தங்ககது கட்சிக்கு தந்து உதவுங்கள் என தேர்தல் நடத்தும் அதிகாரியிடம் கேட்டு கொண்டார்.

இந்தவேட்புமனு தாக்கல் செய்யும் நிகழ்ச்சியின் பொழுது,வழக்கறிஞர் குமாஸ்தா லட்சுமி, ஜெபா, திருவள்ளுவர் நகர் ராதா கிருஷ்ணன், குனியமுத்தூர் முருகன், பால்ராஜ், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி (06.04.2026) நேற்று ஈரோடு மாநகராட்சி மத்திய பேருந்து நிலையத்தில் நடைபெற்ற தேர்தல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சியில் 100 சதவீதம் வாக்குப்பதிவைவழியுறுத்திஆவின்பால்பாக்கெட்டுகளில் " "தேர்தல் நாள் 23.04.2026 தவறாமல் வாக்களிப்பீர்" குறித்து அச்சிடப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருவதை பார்வையிட்டு, அமைக்கப்பட்டிருந்த செல்பி பாயிண்டில் புகைப்படம் எடுத்து விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

## மதுராந்தகம் சட்டமன்ற தனி தொகுதி திமுக வேட்பாளர் அமுல் பொன்மலர் வேட்புமனு தாக்கல்

### க.சுந்தர் எம்.எல்.ஏ, பங்கேற்பு



செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் சட்டமன்ற தனி தொகுதி திமுக வேட்பாளர் அமுல் பொன்மலர் அவர்கள் காஞ்சி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் க. சுந்தர் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் நகர செயலாளர் குமார் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டனி கட்சியின் மாவட்ட செயலாளர்களுடன் மதுராந்தகம் பழைய பேருந்து நிலையம் அருகே அமைந்துள்ள அண்ணா திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து பல்லாயிரக்கணக்கான தொண்டர்களுடன் ஊர்வலமாக சென்று கோட்டாட்சியர் அலுவலகத்தில் தேர்தல் நடத்தும் அலுவலர் நரேந்திரன் அவர்களிடம் வேட்பு மனு தாக்கல் செய்தார்.



மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் கீதாஜீவன் திரேஷ்புரம் பகுதியில் உள்ள மீன சங்கங்களுக்கு நேரில் சென்று பொதுமக்களை சந்தித்து வாக்கு சேகரித்தார். தொடர்ந்து தூத்துக்குடி அண்ணா சங்குகுளி சங்கத் தலைவர் இசக்கிமுத்து மற்றும் முத்தரையர் கனவா மீன்பிடி நலசங்க பொருளாளர் எஸ்.ஆர்.சந்தனராஜ் ஆகியோர் சால்வை அணிவித்து வரவேற்றனர்.

தூத்துக்குடி மாவட்ட அண்ணா சங்குகுளி தொழிற்சங்க துணைத் தலைவர் மாரி லிங்கம்,செயலாளர் முருகையா, ஆலோசகர் எஸ்.ஆர்.சந்தனராஜ் மகாராஜா, அகமது மாற்று முத்தரையர் கனவா மீன்பிடி நல சங்க தலைவர் முனியசாமி, துணைத்தலைவர் ராஜேந்திரன், செயலாளர் பாலு, துணைச்செயலாளர் ஜெகன், ஒருங்கிணைப்பாளர் வெள்ளைச்சாமி, ஆலோசகர் இசக்கிமுத்து மற்றும் மீனவ பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



மதச்சார்பற்ற இந்தியா கூட்டணியின் ஈரோடு மேற்கு சட்ட மன்ற தொகுதியின் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளர் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி சங்குநகர், சூரம்பட்டி பகுதி வார்டு 32 ல் உதயசூரியன் சின்னத்திற்கு கழக நிர்வாகிகள் மற்றும் தோழமை கட்சி நிர்வாகிகளுடன் சென்று வாக்கு சேகரித்தார்.



ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (06.04.2026) ஈரோடு மாநகராட்சி பி.பெ.அக்ரஹாரம், மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் உள்ள வாக்குச்சாவடிகளை பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் D.V.கிரண்ஸ்ருதி உட்பட பலர் உள்ளனர்.

### எடப்பாடி பழனிசாமி வந்த வழியும் தவறு தற்போது உள்ள வழியும் தவறு

# அதிமுகவின் நிரந்தர பொதுச்செயலாளர் கிடையாது வழக்குகள் நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது

## ஓ.பன்னீர்செல்வம் பேட்டி



தளபதி ஸ்டாலினின் வெற்றி வேட்பாளராக போடிநாயக்கனூரில் இன்றையதினம் வேட்புமனு தாக்கல் செய்துள்ளேன். தமிழ்நாடு முழுவதும்உள்ளமதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி வேட்பாளர்கள் மகத்தான வெற்றி பெறுவார்கள். கடந்த காலங்களில் நான் அளித்த வாக்குறுதிகள் மற்றும் மக்கள் வைத்த கோரிக்கைகளில் 100க்கு 99.9% நிறைவேற்றி உள்ளேன்.

அதிமுகவில் இருந்து நானாக வெளியேறவில்லை, அவர்கள் என்னை விரட்டி னார்கள், பொதுக்குழுவில் என் மீது தண்ணீர் பாட்டில் வீசியது யாரென்று அனைவருக்கும் தெரியும். 50 ஆண்டுகால அரசியலில் 25 ஆண்டுகள் சட்டமன்ற உறுப்பினர், 5 ஆண்டுகள் நகர்மன்ற தலைவர் என பொதுவாழ்வில் என்னுடைய கடமையை சிறப்பாக செய்துள்ளேன். என்மீது எந்தவிதமான குற்ற ச்சாட்டுகளும் இல்லை. மக்களின் ஆதரவு மற்றும் அபிமானத்துடன் தான் மக்கள் பிரதிநிதி யாக வர வேண்டும். இருக்க வேண்டும். அந்த வகையில் எடப்பாடி பழனிசாமி கட்சிக்கு வந்த வழி தவறு. சசிகலாவால் முதலமைச்சர் பதவி பெற்ற எடப்பாடி பழனிசாமி, சூரியனை பார்த்து ஏதோ குறைக்கிறது என்று கூறி நன்றி உணர்வு இல்லாத மனிதராக இருக்கிறார்.

அதிமுகவின் பொதுச்செயலாளராக எடப்பாடி பழனிசாமி வந்த பிறகு தொடர் தோல்விகளை தான் சந்தித்து வருகிறது. எடப்பாடி பழனிசாமி அதிமுகவின் நிரந்தர பொதுச்செயலாளர் கிடையாது. இது தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.



# அச்சிறுபாக்கம் அருள்மிகு ஆட்சீஸ்வரர் திருக்கோயில் தேர் வெள்ளோட்டம்

செங்கல்பட்டு மாவட்டம் அச்சிறுப்பாக்கம் அருள்மிகு ஆட்சீஸ்வரர் திருக்கோவில் தேர் வெள்ளோட்டம் விமர்சையாக நடைபெற்றது

இந்தத் தேர் வெள்ளோட்டத்திற்காக கோயில் வளாகத்தில் யாக குண்டங்கள் அமைக்கப்பட்டு கடந்த 3ஆம் தேதி அன்று விக்னேஸ்வரர் பூஜையுடன் தொடங்கியது. தொடர்ந்து 2 நாட்களாக வேத பாராயணம் திருமுறை பாராயணம் விசேஷ ஹோமங்கள் மூன்று கால யாகசாலை பூஜைகள் நடை பெற்றது.

தொடர்ந்து யாகசாலையில் நான்காம் கால யாகசாலை பூஜை நடத்தப்பட்டு மகாதீப ஆராதனைக்குபின்னர்அம்மன் திருத்தேருக்கு கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. அதன் பின்னர் தேரின் வடத்தை பிடித்து இழுத்து பொதுமக்கள் ஆட்சீஸ்வரனுக்குஅரோகராஇளங்கிளி அம்மனுக்கு அரோகரா என கோஷமிட்டபடி தேரின் வடத்தைப் பிடித்து இழுத்தனர். இத்தேரானது நான்கு மாட வீதிகளிலும் வளம் வந்து நிலையை அடைந்தது. இதில் உள்ளூர் மற்றும் வெளியூர்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் பங்கேற்றனர்.



மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் தூத்துக்குடி சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் கீதாஜீவன் தூத்துக்குடி மாநகர பகுதியான 53வது, 54வது வார்டுகளுக்கு உட்பட்ட தோப்புத் தெரு, வடக்குத்தெரு, கீழத்தெரு, முஸ்லிம் தெரு, காளியம்மன் கோவில் தெரு, அய்யன் கோவில் தெரு உள்ளிட்ட பகுதிகளில் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்துதன்னைவெற்றிபெறச்செய்யுமாறுதிமுகமற்றும்கூட்டணிகட்சிநிர்வாகிகள், தொண்டர்களுடன் பிரச்சாரம் மேற்கொண்டார்.

இந்நிகழ்வின் போது ஏ.பி.சி.வி. சண்முகம், சகாயராஜ், தனலட்சுமி, தயாள லிங்கம், சுரேஷ் உள்ளிட்ட கூட்டணி கட்சி நிர்வாகிகள் மற்றும் மாநகர திமுக செயலாளர் ஆனந்த சேகரன், மேயர்ஜெகன்பெரியசாமி, மாவட்டதுணைச்செயலாளர்ராஜ்மோகன்செல்வின், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் அன்பழகன், பகுதிச் செயலாளர்கள் மேகநாதன், ஜெயக்குமார், மாநகராட்சி மண்டல தலைவர் பாலகுருசாமி, மாமன்ற உறுப்பினர்விஜயகுமார், வட்டச்செயலாளர்மனோகரன், மாநகரமகளிர்அணிஜெயக்கனி உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மேற்கு சட்டமன்றதொகுதி திமுக வேட்பாளர் அமைச்சர் சு.முத்துசாமி, சூரம்பட்டி பகுதி 47 ஆவது வார்டு சூரம்பட்டி பேருந்து நிறுத்தம், ஸ்டாலின் வீதி, காந்திஜி வீதி, ஜீவா வீதி, பாண்டியன் வீதி, கட்டபொம்மன் வீதி, பாரதி வீதி, நேதாஜி வீதி 1 ,2 , திருவிக வீதி, அண்ணா வீதி, பாரதிபுரம் உள்ளிட்ட பகுதிகளில் உதயசூரியன்சின்னத்திற்கு வீடு வீடாக நடந்து சென்று வாக்கு சேகரித்தார். உடன் ஈரோடு மாநகர திமுக செயலாளர் மு. சுப்பிரமணியம், சூரம்பட்டி திமுக பகுதி செயலாளர் வில்லரசம்பட்டி முருகேசன், மாமன்ற உறுப்பினர் நந்தகோபு ஆகியோர் உடன் இருந்தனர்.



ஈரோடு மாநகர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் அதிமுக தலைமையிலான தேசியஜனநாயககூட்டணியின்தமிழ்மாநிலகாங்கிரஸ்கட்சியின்வேட்பாளர்M.யுவராஜா நேற்று 6.4.2026 ஈரோடு மேற்கு மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் சிந்துஜாவிடம் தனது வேட்பு மனுவினை தாக்கல் செய்தார்.இந்த நிகழ்வில் அதிமுக மாநகர் மாவட்ட செயலாளர் கே.வி.ராமலிங்கம், ஒன்றிய பகுதிச் செயலாளர் கே.சி. பழனிச்சாமி, பாரதிய ஜனதா கட்சி மாவட்ட தலைவர் செந்தில்குமார், பாட்டாளி மக்கள் கட்சி ஈரோடு மாவட்ட தலைவர் ராஜு ,அம்மா மக்கள் முன்னேற்றக் கழக தலைவர் மாவட்ட தலைவர் வெங்கடேசன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# 3 held for security breach at Delhi assembly: Masked man in car broke through VIP gate, placed a bouquet and left

*One suspect has been arrested and two others detained after a masked man in a car broke through an iron gate at the Delhi legislative assembly complex around 2 pm on Monday – and left after a rather weird act – in what is being treated as a major security breach. The man driving the car, who has since been detained, broke through Gate 2, which is used for VIPs; got out of the car, proceeded to place a bouquet on the porch near Speaker Vijender Gupta's car, and drove away.*



*He hit the tall iron gate as well as a boom barrier on the way in and out. The three suspects were caught in about two hours. Bomb squad teams and crime branch have been called in, and nothing suspicious has been found yet. Special Commissioner of police (Special Cell) Anil Shukla and Special CP (Law and Order) Ravindra Yadav are already at the spot.*

*Staff who were present at Gate 2 and inside during the breach were questioned, officials said. Police also spoke with a rickshaw-puller who said he was hit by the same car around 2.15 pm outside.*



மதச்சார்பற்ற இந்தியா கூட்டணியின் ஈரோடு மேற்கு சட்ட மன்ற தொகுதியின் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளர் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி துறை மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி சூரியம்பாளையம் பகுதி வார்டு 1 வார்டு 2 ல் உதயசூரியன் சின்னத்திற்கு திமுக கழகநிர்வாகிகள்மற்றும்தோழமைகட்சிநிர்வாகிகளுடன் சென்று வாக்கு சேகரித்தார்.

### தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில்

# தூத்துக்குடி தொகுதியில் போட்டியிடும் அதிமுக வேட்பாளர் சி.த.செல்லப்பாண்டியன், வேட்புமனுவைத் தாக்கல் செய்தார்



தூத்துக்குடி டூவிபுரத்தில் உள்ள தேர்தல் அலுவலகம் முன்பிருந்து அதிமுக வேட்பாளர் சி.த. செல்லப்பாண்டியன் ஊர்வலமாகப் புறப்பட்டார். இந்த ஊர்வலம் காய்கறி மார்க்கெட், மாநகராட்சி அலுவலகம், பழைய பேருந்து நிலையம், குருஸ் பர்ணாந்து சிலை, மார்த்தாண்டம்பட்டி, சத்திரம், சிவன் கோவில் மற்றும் பழைய மாநகராட்சி பிரதான சாலைவழியாகப்பழைய துறைமுகம் எதிரே உள்ள கோட்டாட்சியர் அலுவலகத்தை அடைந்தது. தொடர்ந்து, தூத்துக்குடி கோட்டாட்சியரும் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலருமான பிரபுவிடம் சி.த. செல்லப்பாண்டியன் தனது வேட்புமனுவை வழங்கினார். இதில் பாஜக மாநிலச் செயற்குழு உறுப்பினர் விவேகம் ரமேஷ், தொகுதிப் பொறுப்பாளர் சின்னத்துரை, முன்னாள் மேயர் சேவியர் மற்றும் அதிமுக மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் டேனியல் ஆகியோர் உடனிருந்தனர்.

இந்நிகழ்ச்சியில் அதிமுகநிர்வாகிகள் ஜோதிமணி, கே.டி.சி. பேச்சிமுத்து, சங்கர், வழக்கறிஞர் யூ.எஸ். சேகர், நடராஜன், முருகானந்தம், ஆசைத்தம்பி மற்றும் மகளிர் அணி நிர்வாகிகள் ராதா, ஆனந்தராஜ், சண்முகத்தாய், அந்தோணி கிரேசி ஆகியோர் பங்கேற்றனர்.

பாஜக சார்பில் மாவட்டத் துணைத் தலைவர் வழக்கறிஞர் தம்மு சுந்தரம், ஆன்மீகப் பிரிவுச் செயலாளர் உஷா தேவி, மாவட்டப் பொதுச்செயலாளர் ராஜேஷ், மாவட்ட மகளிர் அணிச் செயலாளர் வெள்ளத்தாய் மற்றும் மண்டலத் தலைவர்கள் சுதா, ராஜேஷ் கனி ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும், புரட்சி பாரதம் கட்சி மாரிச்செல்வம், பாட்டாளி மக்கள் கட்சி மாவட்டச் செயலாளர் லட்சுமணன் உள்ளிட்ட கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் ஏராளமானோர் திரளாகக் கலந்துகொண்டனர்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் /மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (06.04.2026) ஈரோடு மாநகராட்சி மத்திய பேருந்து நிலையத்தில் நடைபெற்ற தேர்தல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சியில் 100 சதவீதம் வாக்குப்பதிவை வழியுறுத்தி ஆட்டோக்களில் விழிப்புணர்வு குறித்த ஒட்டுவில்லையினை ஒட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சியர் ச. கந்தசாமி நேற்று (06.04.2026) ஈரோடு மாநகராட்சி மத்திய பேருந்து நிலையத்தில் நடைபெற்ற தேர்தல் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சியில் 100 சதவீதம் வாக்குப்பதிவைவழியுறுத்திபேருந்துகளில்விழிப்புணர்வு குறித்த ஒட்டுவில்லையினை ஒட்டி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.